DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# <u>MCOP. No:179/2021</u>

Deposition of Witness : PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கோபிநாத் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.01.2025

**<u>(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).</u>**
**<u>சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.</u>**

<u>முதல் விசாரணை</u>–

நான் இத்துடன் எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனது சொந்த அறிவிற்கு உட்பட்டது.

1. என்னுடைய ஆதார் அட்டை நகல் ம.த.சா.ஆ.16 ஆகும்.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>2-வது எ.ம.த.கு.வி.:</u>

கேள்வி : இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை வரவில்லை என்றாலும், மனுதாரர் சொல்லியதன் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : விபத்து நடந்த இடம் எது?

பதில் : போடியில் பால் பண்ணைக்கு எதிராக உள்ள இடத்தில்.

கேள்வி : இறந்துபோன ராஜ்குமாரை உங்களுக்கு எத்தனை வருடமாக தெரியும்?

பதில் : சுமார் 30 வருடமாக.

கேள்வி : நீங்கள் எத்தனை வருடமாக பெயிண்டர் வேலை செய்கிறீர்கள்?

பதில் : 10 வருடங்களாக.

கேள்வி : பெயிண்டர் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளீர்களா?

பதில் : இல்லை.

கேள்வி : ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் போது ஒரு தொழிலாளிக்கு விபத்து ஏற்பட்டால் யார் பொறுப்பு?

பதில் : வீட்டு உரிமையாளர்.

கேள்வி : நீங்கள் பெயிண்டர் வேலையோ அல்லது ஒப்பந்த அடிப்படையில் வேலையோ செய்யாததால் தான் உங்களுக்கு அடிப்படை விதி பற்றி தெரியவில்லை என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : ஆட்டோ வாகனம் இறந்து போன ராஜ்குமார் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியது எவ்வளவு தொலைவில் இருந்து பார்த்தீர்கள் என்றால்?

பதில் : 15 அடி துாரம்.

கேள்வி : மனு விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் போலீஸார் விசாரித்தார்களா?

பதில் : ஆம்.

கேள்வி : இந்த விபத்து சம்மந்தமாக வேறு யாரிடமும் தகவல் சொன்னீர்களா?

பதில் : இல்லை.

கேள்வி : ஆட்டோ ஓட்டுநர் வாகனம் நிற்கும் இடத்தில் ஆட்டோவை நிறுத்தி விட்டு டீ சாப்பிட சென்ற பொழுது இருசக்கர வாகனத்தில் வந்த ராஜ்குமார் மது போதையில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை இயக்கி நின்ற ஆட்டோவின் மீது மோதி விட்டார் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : இருசக்கர வாகனம் யாருக்கு பாத்தியப்பட்டது?

பதில் : ராஜ்குமாருக்கு.

கேள்வி : ராஜ்குமார் பெயிண்ட் வேலை செய்ததாகவும், அவருக்கு தினம் ரூ.800/- சம்பளமாக தற்போது வாங்கியதாக சொல்வதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : ஆட்டோவில் முகப்பு விளக்கு தவிர மொத்தம் எத்தனை விளக்குகள் இருந்தன?

பதில் : கூடுதலாக 4 விளக்குகள் வைத்திருந்தார்.

கேள்வி : நீங்கள் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை, மனுதாரருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 30.01.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.01.30 16:03:01 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.

30.01.2025.